DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SIVAKASI

CC.NO.183/2023

**Depositions of PW 5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | லட்சுமி | **Caste** | |
| **Father's Name** | ரகுநாத் | **Calling** | மருத்துவர் |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th Day of March 2026.

Signature of Witness.

**06.03.2026**

எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

**(சாட்சி காணொளி வாயிலாக சாட்சியம் அளித்தார்)**

நான் தற்போது கேரளா மாநிலம், பத்தினம்திட்டாவில் அரசு மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

24.05.2023 ஆம் தேதி மாலை 7.15 மணியளவில் நான் சிவகாசி அரசு மருத்துவமனையில்  பணியில் இருந்தபோது ரவிக்கண்ணன் என்பவரை அவரது தாயார் ராஜலட்சுமி என்பவர் சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வந்தார். மேற்படி ரவிக்கண்ணனை நான் விசாரித்தபோது அன்றைய தினம் மாலை 5.45 மணியளவில் தோட்டத்தில் வைத்து தெரிந்த நபர் ஒருவர் கம்பியால் தாக்கியதாக கூறினார். தலையில் இடது பக்கத்தில் காதிற்கு மேல் பகுதியில் 8x2 செ.மீ அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது. இடது காலில் வலி இருப்பதாகவும் கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். பின்னர் மேல்சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவர் விருதுநகர்அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைத்த கருத்துரையின் பேரில் ரவிக்கண்ணனுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச்சான்று வழங்கினேன். சாட்சியால் வழங்கப்பட்ட **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சிகிச்சையளித்த ரவிக்கண்ணன் என்னிடம் சிகிச்சைக்கு வருவதற்கு முன்பாக வேறு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துகொண்டு என்னிடம் வந்தாரா என்றால் இல்லை. விபத்து பதிவேட்டில் காயம்பட்டவரை கொண்டு வந்தவர் என்ற காலத்தில் "108

ஆம்புலன்ஸ்" என எழுதப்பட்டு அது அடிக்கப்பட்டு அதற்கு அருகில் ராஜலட்சுமி (அம்மா) என்பவரால் கொண்டு வரப்பட்டார் என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், ரவிக்கண்ணனின் வயது அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரவிக்கண்ணன் தன்னை தெரிந்த நபர் தாக்கியதாக தெரிவித்துள்ளபோதிலும் தாக்கிய நபரின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட ரவிக்கண்ணன் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று மரத்தில் மோதும் போது அவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது என்றால், உறுதியாக கூறமுடியாது. மரத்தில் மோதினால் தொடர்புடைய பிற காயங்களும் ஏற்பட்டிருக்கும், ஆனால் அவருக்கு தலையில் மட்டுமே காயம் ஏற்பட்டிருந்தது.